ஸ்ரீ காமகோடி கிரந்தாவலி: 53

॥ श्री ॥

॥ हनुमत्पञ्चरत्नम् ॥

ஹநுமத் பஞ்சரத்னம்



ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1.

ஸ்ரீராம ஜயம்

ஸ்ரீ காமகோடி க்ரந்தாவலி: 43

॥ श्रीः ॥

॥ हनुमत्पञ्चरत्नम् ॥

ஹநுமத் பஞ்சரத்னம்





ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1.

இரண்டாம் பதிப்பு: 1968

விலை: 30 பைசே

லிபர்ட்டி அச்சகம், சென்னை-1.





ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய
ஸ்ரீ ஜகத்குரு காஞ்சீ காமகோடி பீடாதிபதிகள்
ஸ்ரீ சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதீ
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

॥ श्रीः ॥



श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य श्रीमच्छङ्करभगवत्पादप्रतिष्ठित-
श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु श्रीपादैः क्रियते
नारायणस्मृतिः ॥

श्रीमूकपञ्चशती-मुकुन्दमाला-शिवपादादिकेशान्तवर्णनादीन् गरिष्ठान् ग्रन्थविशेषान् द्राविडयनुवादैः साकं प्रकाशयित्वा आस्तिकानां भक्तिभावमभिवर्धयद्भिः अस्मत्प्रियान्तेवासिभिः श्रीकामकोटिकोशस्थाननिर्वाहकैः अद्य श्रीभगवत्पादादिमहनीयैः सर्वजनोद्धारणार्थमनुगृहीताः भगवन्मूर्तिप्रभेदगुणवर्णनपटीयांसः भक्तिरससर्वस्वभूताः श्रीहनूमत्पञ्चरत्न-सुब्रह्मण्यभुजङ्गादिस्तोत्रतल्लजाः द्राविडयनुवादैः साकं प्रकाशयिष्यन्त इति विदित्वा परमां मुदं भजामः ।

आस्तिकाः एतानि स्तुतिरत्नानि सार्थानुसन्धानं पठन्तः शृण्वन्तश्च भगवद्भक्तिपरवशीकृतस्वान्ताः श्रीचन्द्रमौलीश्वरकृपापात्रीभूताः सकलभाग्यजातं प्राप्नुवन्त्वित्याशास्महे ।

यात्रास्थानम्
इलैयात्तकुटी
शुभकृच्छ्रावणशुद्धप्रथमा

नारायणस्मृतिः ।

ஸ்ரீ

முத்திரை

ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யவர்ய
ஸ்ரீமத் சங்கரபகவத்பாத ப்ரதிஷ்டித
ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிப ஜகத்குரு
ஸ்ரீ பாதைः க்ரியதே நாராயண ஸ்ம்ருதிः ||

ஸ்ரீ மூகபஞ்சசதீ - முகுந்தமாலா - சிவபாதாதி கேசாந்தவர்ணநாதீந் கரிஷ்டாந் க்ரந்தவிசேஷாந் த்ராவிட்யநுவாதைஸ்ஸாகம் ப்ரகாசயித்வா ஆஸ்திகாநாம் பக்திபாவமபிவர்த்தயத்பிः அஸ்மத் ப்ரியாந்தேவாஸிபிः ஸ்ரீ காமகோடி கோசஸ்தாந நிர்வாஹகைः அத்ய ஸ்ரீபகவத்பாதாதி மஹநீயைः ஸர்வஜநோத்தாரணார்த்தம் அநுக்ருஹீதாः பகவந்மூர்த்தி ப்ரபேத குணவர்ணந படீயாம்ஸः பக்திரஸ ஸர்வஸ்வபூதாः ஸ்ரீ ஹநுமத் பஞ்சரத்ந – ஸுப்ரஹ்மண்ய புஜங்காதி ஸ்தோத்ர தல்லஜாः த்ராவிட்யநுவாதைஸ்ஸாகம் ப்ரகாசயிஷ்யந்த இதி விதித்வா பரமாம் முதம் பஜாமः |

ஆஸ்திகாः ஏதாநி ஸ்துதிரத்நாநி ஸார்த்தாநுஸந்தாநம் படந்தः ச்ருண்வந்தஶ்ச பகவத்பக்தி பரவசீக்ருதஸ்வாந்தாः ஸ்ரீ சந்த்ரமௌளீச்வர க்ருபா பாத்ரீபூதாः ஸகல பாக்யஜாதம் ப்ராப்நுவந்து இத்யாசாஸ்மஹே |

யாத்ராஸ்தாநம்
இளையாத்தகுடி
சுபக்ருத் ச்ராவண சுத்தப்ரதமா
} நாராயண ஸ்ம்ருதிः

ஸ்ரீ:

முத்திரை

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யர்களான ஸ்ரீமத் சங்கரபகவத்பாதர்களால் ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்துக்கு அதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ பாதர்களால் நாராயணஸ்மரணம் செய்யப்படுகிறது.

ஸ்ரீ மூகபஞ்சசதி — முகுந்தமாலா — சிவபாதாதி கேசாந்தவர்ணநம் முதலிய மிகவும் உயர்ந்த க்ரந்தங்களை தமிழ்மொழி பெயர்ப்புடன் வெளிப்படுத்தி ஆஸ்திகர்களுக்குப் பக்தியை அபிவ்ருத்தி செய்தவர்களும் நமக்கு ப்ரியசிஷ்யர்களுமான ஸ்ரீ காமகோடி கோசஸ்தான நிர்வாஹம் செய்பவர்களால் இப்பொழுது ஸ்ரீ பகவத்பாதர்கள் முதலிய பெரியோர்களால் எல்லா ஜனங்களையும் உத்தரிப்பதற்காக அநுக்ரஹிக்கப்பட்டதும் பகவானுடைய திவ்விய திருமேனிகளையும் குணங்களையும் வர்ணிப்பதில் சிறந்தவையும் பக்திரஸம் நிறைந்ததுமான ஸ்ரீ ஹநுமத் பஞ்சரத்னம் ஸுப்ரண்ய புஜங்கம் முதலிய ஸ்தோத்ரங்கள் தமிழ் அநுவாதங்களுடன் வெளியிடப்போவதாகத் தெரிந்து மிகுந்த ஸந்தோஷத்தை அடைகிறோம்.

ஆஸ்திகர்கள் இந்த ஸ்தோத்ர ரத்னங்களை அர்த்தத்துடன் படித்தும் கேட்டும் பகவத் பக்தியின் மேலீட்டால் பரவசமான மனதையுடையவர்களாய் ஸ்ரீ சந்த்ர மௌளீச்வரர் அருளுக்கு பாத்ரராய் எல்லாவிதமான பாக்யங்களையும் பெறும்படி ஆசாஸிக்கிறோம்.

யாத்ராஸ்தானம் இளையாத்தகுடி சுபக்ருத் ச்ராவண சுத்தப்ரதமா	நாராயண ஸ்ம்ருதி:

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]



॥ श्रीः ॥

॥ हनुमत्पञ्चरत्नम् ॥

ஹநுமத் பஞ்சரத்னம்

இந்த ஸ்தோத்திரம் சப்தாலங்காரமான அநுப்ராஸங்கள் நிரம்பியது. ஹநுமத் பிரஸாதத்தையும், ராமபக்தியையும், நினைத்த காரியஸித்தியையும் நிறைவேற்றத்தக்கது. ஆகவே இந்த ஸ்தோத்திரத்தைத் தமிழ் மொழிபெயர்ப்புடன் வெளியிட்டிருக்கிறோம். மூல ச்லோகங்களைத் தமிழ் எழுத்திலும் தந்திருக்கிறோம். ஆஸ்திகர்கள் அனைவரும் படித்துப் பயன் பெறுவார்களென்று நம்புகிறோம்.

वीताखिलविषयेच्छं
जातानन्दाश्रुपुलकमत्यच्छम् ।
सीतापतिदूताद्यं
वातात्मजमद्य भावये हृद्यम् ॥ १ ॥

வீதாகிலவிஷயேச்சம்
ஜாதாநந்தாச்ருபுலகமத்யச்சம் ।
ஸீதாபதிதூதாத்யம்
வாதாத்மஜமத்ய பாவயே ஹ்ருத்யம் ॥ 1 ॥

1. **वीताखिलविषयेच्छं**-உலகவிஷயப்பற்றை விலக்கியவரும், **जातानन्दाश्रुपुलकं**-ஆனந்தக் கண்ணீர் பெருக்கியவரும், **अत्यच्छं** - மாசற்றவரும், **सीतापतिदूताद्यं** - ஸ்ரீராமனின் உத்தம தூதரும், **हृद्यं** – இன்பமளிப்பவருமான, **वातात्मजं** - வாயுவின் புதல்வனை, **अद्य** - இப்பொழுது, **भावये** - மனத்தில் தியானிக்கிறேன்.

ஸுந்தரகாண்டத்தில் ஹநுமான், "**मनो हि हेतुः सर्वेषाम् इन्द्रियाणां प्रवर्तने**" என்று அந்தப்புரத்தைச் சுற்றிவந்து தம் மனத்தைப் பரீக்ஷித்துச் சொன்னதையும், '**बाष्पवारिपरिपूर्णलोचनं**' என்றும், '**वातात्मजं वानरयूथमुख्यं**' என்றும் த்யான ச்லோகங்கள் கூறுவதையும், ஆசாரியர் இங்கே நினைவுறுத்துகிறார்.

तरुणारुणमुखकमलं
करुणारसपूरपूरितापाङ्गम् ।
संजीवनमाशासे
मञ्जुलमहिमानमञ्जनाभाग्यम् ॥ २ ॥

தருணாருணமுககமலம்
கருணாரஸபூரபூரிதாபாங்கம் |
ஸஞ்ஜீவநமாசாஸே
மஞ்ஜுலமஹிமாநமஞ்ஜநாபாக்யம் ॥ 2 ॥

2. **तरुणारुणमुखकमलं** - உதயசூரியனையொத்த முகமுள்ளவரும், **करुणारसपूरपूरितापाङ्गं** - கருணை வெள்ளம் ததும்பும் கடைக்கண்களுடையவரும்,

संजीवनं - வானரசேனைகளை உயிர்ப்பித்தவரும், **मञ्जुलमहिमानं**-மிகப் பெருமை பெற்றவரும், **अञ्जनाभाग्यं** அஞ்ஜனாதேவி பெற்ற பாக்கிய உருவே ஆனவருமான ஆஞ்சனேயரை, **आशासे** - வாழ்த்துகிறேன்.

இந்திரஜித்தின் மாயைக்கு உட்பட்டுச் சுயநினைவற்றுக் கிடந்த வானரசேனையை உயிர்ப்பித்து, இந்திரஜித்தினிடமுள்ள கோபத்தாலும் காரிய வேகத்தாலும் உண்டான செம்மை முகத்தில் தோன்ற, அனைவரிடமும் ஏற்பட்ட இரக்கம் ஹநுமானின் கண்களில் தோன்றுகிறது.

शम्बरवैरिशरातिग-

मम्बुजदलविपुललोचनोदारम् ।

कम्बुगलमनिलदिष्टं

बिम्बज्वलितोष्ठमेकमवलम्बे ॥ ३ ॥

சம்பரவைரிசராதிகம்

அம்புஜதலவிபுலலோசனோதாரம் ।

கம்புகலமநிலதிஷ்டம்

பிம்பஜ்வலிதோஷ்டமேகமவலம்பே ॥ 3 ॥

3. **शम्बरवैरिशरातिगं** - சம்பரனை வென்ற காமனுக்கு உட்படாதவரும், **अम्बुजदलविपुललोचनोदारं** — தாமரை இதழ்போல் அகன்று விளங்கும் கண்களைக் கொண்டவரும், **कम्बुगलं** - சங்கம்போன்ற கழுத்துடையவரும், **बिम्बज्वलितोष्ठं** - கோவைக்கனிபோன்ற உதட்டை உடையவரும், **एकं** - நிகரற்றவருமான,

अनिलदिष्टं - வாயுவினுடைய பாக்கியத்தின் உருவான வரும் ஆன ஹநுமானை, अवलम्बे - பற்றிக்கொள்கிறேன்.

ஆசார்யர் இந்த ச்லோகத்தில், ஹநுமானுடைய நித்யப்ர்ஹ்மசர்யத்தையும், கம்பீரமான தோற்றத்தையும் உதடு கழுத்து இவற்றின் அழகையும் விவரிக்கிருர்.

दूरीकृतसीतार्तिः
प्रकटीकृतरामवैभवस्फूर्तिः ।
दारितदशमुखकीर्तिः
पुरतो मम भातु हनुमतो मूर्तिः ॥ ४ ॥

தூரீக்ருதஸீதார்த்தி :
ப்ரகடீக்ருதராமவைபவஸ்பூர்த்தி : ।
தாரிததசமுககீர்த்தி :
புரதோ மம பாது ஹநுமதோ மூர்த்தி : ॥ 4 ॥

4. दूरीकृतसीतार्ति : - ஸீதையின் மனவேதனையை அகற்றியதும், प्रकटीकृतरामवैभवस्फूर्ति : — ஸ்ரீராமரின் பெருமையை எங்நாட்டிலும் தோன்றச் செய்ததும், दारितदशमुखकीर्ति : - இராவணனது புகழைப் பிளங் தெறிந்ததுமான, हनुमतो मूर्ति : - ஹநுமாரின் உருவம், मम எனது, पुरत : - எதிரே, भातु - தோன்றி விளங்கட்டும்.

जयत्यतिबलो रामः लक्ष्मणश्च महाबलः ।
राजा जयति सुग्रीवो राघवेणाभिपालितः ॥

ஜயத்யதிபலோ ராம: லக்ஷ்மணச்ச மஹாபல: ।
ராஜா ஜயதி ஸுக்ரீவ: ராகவேணாபிபாலித: ॥

दासोऽहं कोसलेन्द्रस्य रामस्याक्लिष्टकर्मणः ।
हनुमान् शत्रुसैन्यानां निहन्ता मारुमात्मजः ॥

தாஸோऽஹம் கோஸலேந்த்ரஸ்ய
ராமஸ்யாக்லிஷ்டகர்மண: ।
ஹநுமாந் சத்ருஸைந்யாநாம்
நிஹந்தா மாருதாத்மஜ: ॥

न रावणसहस्रं मे युद्धे प्रतिबलं भवेत् ।
शिलाभिस्तु प्रहरतः पादपैश्च सहस्रशः ॥

ந ராவணஸஹஸ்ரம் மே யுத்தே ப்ரதிபலம் பவேத் ।
சிலாபிஸ்து ப்ஹரத: பாதபைச்ச ஸஹஸ்ரச: ॥

अर्दयित्वा पुरीं लङ्काम् अभिवाद्य च मैथिलीम् ।
समृद्धार्थो गमिष्यामि मिषतां सर्वरक्षसाम् ॥

அர்தயித்வா புரீம் லங்காம்
அபிவாத்ய ச மைதிலீம் ।
ஸம்ருத்தரார்த்தோ கமிஷ்யாமி
மிஷதாம் ஸர்வரக்ஷஸாம் ॥

என்கிறபடியேஸகல ஆபத்துக்களையும் விலக்கிக் காரியஸித்தியைப் பெறச்செய்கிற மந்திரரூபமான ச்லோகங்களின் உட்கருத்தை ஆசார்யர் இங்கு எடுத்துக் கூறியிருக்கிறார். இந்த ச்லோகங்கள் ராமாயணத்தில் சுந்தர காண்டத்தில் பல தடவை வருகின்றன என்பதையும் கவனத்தில் கொள்க.

वानरनिकराध्यक्षं

दानवकुलकुमुदरविकरसदृक्षम् ।

दीनजनावनदीक्षं

पवनतपःपाकपुञ्जमद्राक्षम् ॥ ५ ॥

வாநரநிகராத்யக்ஷம்

தாநவகுலகுமுதரவிகரஸத்ருக்ஷம் ।

தீநஜநாவநதீக்ஷம்

பவநதப:பாகபுஞ்ஜமத்ராக்ஷம் ॥ 5 ॥

5. वानरनिकराध्यक्षं-வானரஸைன்யத் தலைவரும், दानवकुलकुमुदरविकरसदृक्षं - ராக்ஷஸ குலமாகிய கருநீல புஷ்பங்களுக்குச் சூரியகிரணம்போல அமைந்தவரும், दीनजनावनदीक्षं - எளியோரைக் காக்கக் கங்கணங் கொண்டவரும், पवन - तपः पाकपुञ्जं - வாயுவினது தவப்பயனாக உள்ளவருமான இவரை, अद्राक्षं - நேரில் கண்டேன்.

முன் சுலோகத்தில் ஆஞ்சனேயரது உருவம் கண்முன்னே தோன்றட்டும் என்று உள்ளமுருகி வேண்டியபிறகு, இந்த ச்லோகத்தில், "வானரத்

தலைவரும், ராக்ஷஸர்களுக்கு அந்தகரும், ஆனாலும் தம்மை வேண்டி அடைக்கலம் புகுகிற எளியோரைக் காப்பாற்றும் உறுதிகொண்டவருமான ஹநுமானின் மூர்த்தியைக் கண்டேன்" என்று கூறி, ஆசார்யர் இந்த ஸ்தோத்திரத்தின் பயனையும் பெருமையையும் தெளிவாகச் சுட்டிக் காண்பிக்கிறார். ஹநுமானைக் கண்டேன் என்று சொல்லாமல், வாயுவின் தவப்பயனின் குவியலைக் கண்ணுற்றேன் என்று கூறுவதனால், மனத்தில் தோன்றும் உருத் தோற்றத்தை மட்டும் புலப்படுத்தியதாகிறது.

एतत्पवनसुतस्य
स्तोत्रं यः पठति पञ्चरत्नाख्यम् ।
चिरमिह निखिलान् भोगान्
भुक्त्वा श्रीरामभक्तिभाग्भवति ॥

ஏதத் பவநஸுதஸ்ய
ஸ்தோத்ரம் ய: படதி பஞ்சரத்நாக்யம் |
சிரமிஹ நிகிலாந் போகாந்
புக்த்வா ஸ்ரீராமபக்திபாக் பவதி ||

यः - எவன், **पवनसुतस्य** – வாயுகுமாரனின், **एतत्** - இந்த, **पञ्चरत्नाख्यं** - பஞ்சரத்னம் என்ற பெயர்பெற்ற, **स्तोत्रं**-ஸ்தோத்திரத்தை, **पठति**-படிக்கிறானோ (அவன்), **इह** - இவ்வுலகில், **चिरं**-வெகுகாலம், **निखिलान् भोगान्** - அநுபவங்களனைத்தையும், **भुक्त्वा**- அனுபவித்துவிட்டு, **श्रीरामभक्ति - भाक्** - ஸ்ரீராமனிடத்து உள்ளன்பு கொண்டவனாக, **भवति** – ஆகிறான்.

இந்த ஸ்தோத்திரத்துக்குப் 'பஞ்சரத்னம்' என்ற பெயர் அமைந்தது மிகப் பொருத்தமானது. ஐந்து ச்லோகங்களும் ஐந்து ரத்தினங்களாகவும், ராமாயணக் கருத்துக்கள் அடங்கியவையாகவும் இருக்கின்றன. இவை இன்பமனைத்தையும் அளிப்பதுடன், இராமபக்தி எப்பொழுதும் மனத்தில் நிலைத்து நிற்கும்படி செய்கின்றன.

|| इति श्रीगोविन्दभगवत्पूज्यपादशिष्यस्य
श्रीमच्छंकरभगवतः कृतौ हनुमत्पञ्चरत्नं संपूर्णम् ||

ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் இயற்றிய
ஹநுமத் பஞ்சரத்னம் முற்றும்.



ஸ்ரீ சந்த்ரமௌலீச்வராய நம:

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின்

சில முக்கிய வெளியீடுகள்

ஒவ்வொரு புத்தகமும் பல படங்களுடனும் ஸ்ரீ ஆசார்யாளுடைய அநுக்ரஹ பூர்வகமான ஸ்ரீமுகத்துடனும் கூடியது.

		ரூ. பை.
1.	ஸ்ரீ பஜகோவிந்தம்—ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் அனுவாதமும்	0—60
2.	ஸ்ரீ முகுந்தமாலா—ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் உரையும் கூடியது	0—60
3.	ஸ்ரீ ப்ரச்நோத்தர ரத்நமாலிகா—ஸ்ரீ சங்கரபகவத்பாதர் இயற்றியது (தமிழ் லிபியில்)	0—25
4.	ஸ்ரீ மூகபஞ்சசதீ—ஸம்ஸ்கிருத மூலமும் (தமிழுரையுடனும்)	2—50
5.	ஸ்ரீ ஆனந்த ஸாகரஸ்தவம்—ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் இங்கிலீஷ் அனுவாதமும்	0—87
6.	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்—தேவநாகரி, தமிழ் லிபிகளில் மூலமும், தமிழ் அனுவாதமும்	2—50
7.	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரமும், நாமாவளியும்—ஸம்ஸ்கிருதத்தில்	0—30
8.	—ஷை—தமிழில் ச்லோகமும், நாமாவளியும்....	0—25
9.	ஸ்ரீசிவபாதாதி கேசாந்த வர்ணநம் முதலிய ஐந்து சிவ ஸ்தோத்ரங்கள்—ஸம்ஸ்கிருத ஸ்தோத்ரமும் தமிழ் அனுவாதமும்	0—87
10.	விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்ரம்—ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் ஆங்கில அனுவாதங்களும்	0—75
11.	ஸ்ரீ சாந்தி விலாஸம்—ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ரமும் தமிழ் அனுவாதமும்	0—75
12.	மாத்ருகா புஷ்பமாலா ஸ்துதி—ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ் அனுவாதமும்	0—62
13.	ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்—ஸ்ரீ ஸுரேச்வராசார்யாளின் மானஸோல்லாஸ வார்த்திகத்துடன் கூடியது	1—75
14.	ஸ்ரீ துர்கா சந்த்ர கலாஸ்துதி—ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் அருளியது	0—50
15.	ஆத்மார்ப்பண ஸ்துதி—ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் இயற்றியது	0—75

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1